**https://arimanokku.com/** UGC-CARE LISTED AND PEER REVIEWED JOURNAL
**ISSN: 2320-4842 (Print)** **ISSN: 3049-2688 (Online)**

ARIMA NOKKU
ISSN: 2320 - 4842

19-2 April 2025

**Published on 14, April-2025** **ISSN: 3049-2688 (Online)**

# பண்டைய இந்தியாவில் பொருளாதார முடிவுகளின் கண்ணோட்டம்

**முனைவர் து. உமாபதி**
உதவிப்பேராசிரியர், பொருளாதாரத்துறை
துவாரகதாஸ் கோவர்தன்தாஸ் வைணவக் கல்லூரி, அரும்பாக்கம், சென்னை - 106.

## முன்னுரை

பண்டைய இந்தியாவில் ஒவ்வொரு காலத்திலும் ஒவ்வொரு வகையான பொருளாதாரச் சிந்தனைகள் ஆட்சியாளர்கள் மத்தியிலும் மக்கள் மத்தியிலும் இருந்தன. அவை மிகவும் வலிமையுடையதாகவும் பொதுநலன் அடிப்படையிலும் அமைந்து மக்களின் முன்னேற்றப் பாதைக்கு வழிவகுத்தன. நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கான முயற்சிகளையும் அர்ப்பணிப்பையும் மக்கள் கொண்டிருந்தனர். மத மோதல்களைப் பொருட்படுத்தாமல் பொருளாதாரத்தில் ஏற்படுத்திய துணிச்சலான முடிவுகள் பாரத தேசத்தை மிக அழகாக வடிவமைத்தது. உற்பத்தி முடிவுகள் அனைத்துத் துறைகளிலும் சமமான நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தின. இதனால் அதிக உற்பத்தி ஏற்பட்டு நாட்டின் நிலையான பொருளாதாரம் உறுதி செய்யப்பட்டது. சிந்து சமவெளி நாகரிகம், ஹரப்பா நாகரிகம், மௌரியப் பேரரசு முதலான பழங்காலத்தில் இந்திய மக்களும் ஆட்சியாளர்களும் கொண்டிருந்த மிகச்சிறந்த பொருளாதாரச் சிந்தனைகள் குறித்தும் ஆட்சி செய்த முறைமை குறித்தும் அவர்களின் வாழ்வியல் குறித்தும் ஆய்வதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

**கலைச்சொற்கள்:** பொருளாதார முடிவுகள், சிந்து சமவெளி நாகரீகம், பண்டைய இந்திய, ஹரப்பா நாகரிகம், மௌரியப் பேரரசு, தொழில் வளர்ச்சி மற்றும் புதுமை.

## சிந்து சமவெளி நாகரிகம்

சிந்து சமவெளி நாகரிகம் கல்வெட்டுகளைப் புரிந்துகொள்ளும் அறிவு இல்லாத மற்றும் சிறந்த தொழில்நுட்ப அமைப்பும் இல்லாத பழமையான நாகரிகம். ஆனால் அந்தக் காலகட்டங்களில் வீட்டைக் கட்டுவதற்கு அவர்கள் தயாரித்த செங்கற்கள் பயன்படுத்துவதற்கு மிகவும் வலுவாக இருந்தன. புதிய சிந்தனை மற்றும் செயல்களை உருவாக்குவதில் அவர்கள் ஆர்வம் காட்டினர். அவர்களால் எடுக்கப்பட்ட பல முன்முயற்சிகள் அனைத்தும் பாராட்டத்தக்கவை.

## விவசாய உற்பத்தித்திறன்

ஹரப்பா நாகரிகம் நீர்ப்பாசன முறைகள், பயிர் சுழற்சி மேலாண்மை, இயற்கை உர சாகுபடி முறைகள் போன்றவற்றில் முக்கியக் கவனம் செலுத்தியது. அவை விவசாய புரட்சிக்கு அடித்தளமாக இருந்த கௌடில்யரால் செயல்படுத்தப்பட்டன. ஹரப்பா நாகரிக மக்கள் கோதுமை, பார்லி, ராகி, பட்டாணி போன்றவற்றை அதிக அளவில்

உற்பத்தி செய்தனர். இவை தவிர, எள் மற்றும் கடுகு ஆகியவற்றையும் பயிரிட்டனர்.

ஹரப்பா பயிர் செய்கை முறையில் கலப்புப் பயிர் முறை இருப்பதைக் காளிபங்கன் என்ற பகுதி உறுதிப்படுத்தியது (தாப்பர் 1973, 85-104). என்பதை 'ஹரப்பா நாகரிகத்தில் விவசாயமும் அதன் கவனிப்பும்' (2021) என்ற கட்டுரையில் முனைவர் ஜிதேந்திர சிங் நௌலாகா என்பவர் குறிப்பிடுகிறார்.

## வர்த்தக வழிகளை அமைப்பதில் முன்னோடி

மௌரியப் பேரரசு மற்ற நாகரிகங்களை இணைக்கும் வர்த்தகப் பாதைகளை அமைப்பதில் முன்னோடியாக விளங்கியது. எனவே, மசாலாப் பொருட்கள், பருத்தி, ஜவுளி, பட்டு, ரத்தினக் கற்கள், தந்தம் போன்ற பொருட்களை மிகவும் எளிதாகப் பரிமாறிக் கொண்டனர். மயூர மற்றும் குப்தர் காலத்தில் நிலையான நாணயமுறை மிகவும் பிரபலமாக இருந்தது. பொருளாதாரப் பரிவர்த்தனைகள் வர்த்தகத்தை அதிக உயரத்திற்கு ஊக்குவித்தன. உலகெங்கிலும் உள்ள இறக்குமதி மற்றும் ஏற்றுமதி நடவடிக்கைகளை எளிதாக்குவதற்குக் கப்பல் போக்குவரத்து வலுவாகப் பயன்படுத்தப்பட்டது.

அக்காலகட்டங்களில் வர்த்தக வழிகளை உருவாக்க முற்படும்போது மலைகள் மற்றும் காடுகள் மிகவும் சவால்கள் நிறைந்ததாக இருந்தன. இதற்கு மாறாக சமமான நிலப்பரப்புகள், ஆறுகள் மற்றும் கடல் பரப்பை மையமாகக் கொண்டு வர்த்தக பாதை அமைப்பது மிகவும் சுலபமான ஒன்றாக விளங்கியது. ஆல்சின் கருத்துப்படி இந்தியாவில் கடல் வழி வர்த்தகம் சிந்து காலத்தில் இருந்து தொடங்கியது.

நாணயங்களின் அறிமுகம், வர்த்தக ஒழுங்குமுறைகளை நிறுவுதல் போன்ற கருத்துகளை உள்ளடக்கிய அர்த்த சாஸ்திரம் என்ற புத்தகம், வர்த்தகத்தை மேம்படுத்த மிகவும் உறுதுணையாக இருந்தது (தாப்பர் 1973, 52 ). குப்தாவின் கூற்றுப்படி (1996) ஒருமைப்படுத்தப்பட்ட கடல்வழியை நிறுவுவதற்கு அடித்தளமாக அமைந்தது. நிர்வாக நெறிமுறைகள் மற்றும் விரிகுடாவின் கரையோரங்களில் துறைமுகங்களை அமைத்தல் போன்ற செயல்கள் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்பட்டன. அவை மட்டுமல்லாமல், கடல் வணிகத்தை ஒழுங்குபடுத்த வங்காளம் மற்றும் அரபிக்கடல் பகுதிகளில் அதற்குச் சுங்கவரி விதிக்கப் பட்டது. மேலும் வர்த்தக பாதுகாப்பை உறுதிப்படுத்த கடல்சார் சட்டங்கள் அமல்படுத்தப்பட்டது. இதன் மூலம் உலகெங்கும் உள்ள நாடுகளுக்குப் பொருட்கள் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி சுலபமானது. காலப்போக்கில் வர்த்தக வருவாயை இரட்டிப்புச் செய்தது.

ஹரப்பாவின் நகர்ப்புற உள்கட்டமைப்புப் பண்டைய நகரங்களின் அன்றாட வாழ்க்கையை எளிதாக்கியது மட்டுமல்லாமல் அது எதிர்கால நகர்ப்புற வளர்ச்சிக்கான நிலையான அடித்தளத்தை அமைத்துள்ளது. அதன் பொறியியல் மற்றும் கட்டிடக்கலையின் உறுதித்தன்மை நாகரிகத்தின் குறிப்பிடத்தக்க சாதனைகளாகப் பிரதிபலிக்கிறது. இது நகர்ப்புற திட்டமிடல், நீர் மேலாண்மை மற்றும் சுகாதாரம் பற்றிய நாகரீகத்தின் மேம் பட்ட புரிதலை வெளிப்படுத்துகிறது.

## உள்கட்டமைப்பில் முன்னேற்றம்

உள்கட்டமைப்பு மேம்பாடு என்பது எந்தவொரு நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கும் அடிப்படையாகும். இதுவே கடந்த காலங்களில் ஆட்சியாளர்களால் வலுவாக முன்னெடுக்கப்பட்ட அடிப்படை யோசனையாகும். வடிகால், புதிய சாலையமைப்பு, நீர்ப்பாசன வசதி போன்ற முறையான பொது நல அமைப்பு இருந்தது. ஹரப்பா, மொஹஞ்சதாரோ, மௌரிய சந்திரகுப்தா மற்றும் அசோகர் போன்ற தலைவர்கள் அனைவரும் தங்கள் தலைமைத்துவத்தில் தனித்துவமானவர்கள். நாட்டின் வளர்ச்சி மற்றும் செழிப்பு என்ற ஒரு கருப்

பொருளில் கவனம் செலுத்தியவர்கள். 'நாணயங்களின் அறிமுகம், வர்த்தக ஒழுங்குமுறைகளை நிறுவுதல் போன்ற கருத்துகளை உள்ளடக்கிய அர்த்த சாஸ்திரம் என்ற புத்தகம், வர்த்தகத்தை மேம்படுத்த மிகவும் உறுதுணையாக இருந்தது'. (தாப்பர் 1973) 'ஒருமைப் படுத்தப்பட்ட கடல்வழியை நிறுவுவதற்கு அடித்தளமாக அமைந்தது. நிர்வாக நெறிமுறைகள் மற்றும் விரிகுடாவின் கரையோரங்களில் துறைமுகங்களை அமைத்தல் போன்ற செயல்கள் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்பட்டது'(குப்தா 1996).

## தொழில்மயமாக்கல்

பண்டைய இந்தியாவில் தொழில்மயமாக்கல் மேற்கத்திய நாடுகளைப் போலவே உயர்தர ஜவுளிகளை உற்பத்தி செய்து வந்தது. அவர்கள் அந்த நூற்றாண்டுகளில் எடுத்த முடிவால்தான் இது சாத்தியமானது. பொதுவாக மாற்றம் என்பது சவாலான ஒன்றாகும், ஆனால் தலைவர்கள் தங்கள் முடிவில் மிகவும் கண்டிப்பானவர்களாக இருந்தனர். மேலும், மக்கள் எந்த தயக்கமும் இல்லாமல் அவர்களை ஆதரித்தனர். மக்கள் தலைவர்களைத் தானாக ஏற்றுக் கொள்ளும்போது, அவர்களின் காலடிச் சுவடுகளைப் பின்பற்றுவது வழக்கம்; இந்த விஷயத்தில் இது உண்மையாகி உள்ளது. அவர்கள் செலவுகளைப் பற்றிக் கவலைப்பட்டதில்லை; மாறாக, அவர்கள் தங்கள் பேரரசு வளர வேண்டும் என்று விரும்பினர். அவர்களின் கருத்துக்கள் அனைத்தும் வளர்ச்சி சார்ந்ததாகவும் நீண்ட காலம் நீடிக்கும் தன்மை கொண்டதாகவும் உள்ளது. அவர்களின் தார்மீக மதிப்பீடுகள் மற்றும் கொள்கைகள் ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்குப் பிறகு நம்மை நினைவில் கொள்ள வைத்தன.

பண்டைய இந்தியாவில் ஜவுளி என்ற தலைப்பில் ஜவுளிகளின் பங்கை ஏ. கே. நரேன் (1909-1997) எடுத்துக்காட்டி உள்ளார். சிந்து சமவெளி நாகரிகம், மௌரிய மற்றும் குப்தா போன்ற பேரரசர்கள் காலகட்டங்களில் பருத்தி மற்றும் பட்டு ஜவுளிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. அதன் விளைவாக அதன் உற்பத்தி இந்தியாவில் அதிகரித்து காணப்பட்டன என்பதை நம்மால் உறுதி செய்ய முடிகிறது.

## கைவினை வேலை

மிகவும் திறமையான கைவினைஞரைக் கொண்டிருப்பதில் இந்தியா வளமாக உள்ளது, கைவினைஞர்கள் மிகவும் திறமையான சிறிய ஆபரணங்கள் மற்றும் உலோக வேலைகளைச் செய்வதில் வல்லுனர்களாக இருந்தனர். இவ்வேலைகள் எல்லா இடங்களிலும் பெரும் தேவையைக் கொண்டிருந்தது. வெளி நாட்டு நாணயத்தைச் சம்பாதிக்க உதவியது. இயந்திரம் இல்லாத அந்த நாட்களில் மனிதன் மிகப்பெரிய அற்புதங்களைச் எப்படிச் செய்து முடித்தான் என்பதுதான் சாமானியர்களின் மனதில் நீடித்துக் கொண்டிருந்த மில்லியன் டாலர் கேள்வி. உணவு தானியங்களைப் பாதுகாக்க மண்பாண்டங்கள் தயாரிப்பதில் வல்லுநர்களாக அக்கால மக்கள் விளங்கினர்.

கைவினைப் பொருட்களான மட்பாண்டங்கள், உலோகப் பொருட்கள் மற்றும் பருத்தி ஜவுளிகள் போன்றவை மௌரிய காலத்தில் மிகவும் பிரபலமாக திகழ்ந்ததை 'இந்தியாவின் ஆரம்பகால வரலாறு' என்ற புத்தகத்தில் ஜி. ஏ. எஃப். ஹக்ஸ்லி (1957) அவர்கள் எடுத்துக்காட்டி விளக்கியுள்ளார். இந்நூலின் மூலம் பாடலிபுத்திரா மற்றும் உஜ்ஜைனி போன்ற பண்டைய இந்திய நகரங்களில் கைவினைப் பட்டறைகள் இருப்பது உறுதியாகியுள்ளது. அது தற்போது பீகார் மற்றும் மத்திய பிரதேச மாநில எல்லைகளில் அமைந்துள்ளது.

சிந்து சமவெளி நாகரிகம், மௌரிய மற்றும் குப்தா போன்ற பேரரசர்கள் காலகட்டங்களில் பருத்தி மற்றும் பட்டு ஜவுளிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்

பட்டதை ஏ. கே. நரேன் (1909-1997) அவர்கள் 'பண்டைய இந்தியாவில் ஜவுளி' என்ற தலைப்பில் ஜவுளிகளின் பங்கை எடுத்துக்காட்டியுள்ளார்.

## கடுமையான விதிகள் மற்றும் ஒழுங்கு முறைகள்

எந்தவொரு நாட்டின் வளர்ச்சியும் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் வைக்கப் படும் விலை நிர்ணயம், வரி விதித்தல், தரத்தைச் சரிபார்த்தல் மற்றும் சந்தைக் கையாளுதலைத் தடுப்பது போன்ற ஒழுங்குமுறையைப் பொறுத்தது. இத்த கைய நடைமுறையானது நாட்டில் ஸ்திரத் தன்மை மற்றும் நிலைத்தன்மையை ஊக்குவித்துப் பராமரிக்கிறது. ஒரு நாட்டில் உள்ள வர்த்தகர்கள் உட்பட அனைத்து பொதுமக்களும் அதிக ஒத்துழைப்புடன் இருந்தனர், எனவே கண்காணிப்பு அமைப்பு மிகவும் எளிதானது மற்றும் பயனுள்ளது.

பண்டைய இந்தியாவில் வர்த்தக விதிமுறைகளைக் கில்டுகள் மற்றும் வணிக நிறுவனங்கள் பொருட்களின் தரத்தை உறுதி செய்தன. சில பொருட்களுக்கு விலையை நிர்ணயம் செய்தன. அது மட்டுமல்லாமல் பல வணிகர்களுக்குப் பாதுகாப்பு அளித்தன. உள்ளூர் மற்றும் தொலைதூர வர்த்தக த்தை ஒழுங்குப்படுத்துவதில் முக்கியப் பங்கு வகித்தன. மேலும் வர்த்தகர் களுக்கிடையே மோதல்களைத் தீர்க்கும் அதிகாரம் அவர்களிடம் இருந்த காரணத்தினால் சுமூகமான வர்த்தகத்தை மேற்கொண்டனர் என்பதை 'இந்தியா வின் பண்டைய கடந்த காலம்' என்ற நூலில் ஆர். எஸ். சர்மா (2005) அவர்கள் விளக்கியுள்ளார்.

## நெறிமுறை நடைமுறை

தர்மத்தை மையக் கருப்பொருளாகவும் கொள்கையாகவும் பண்டைய இந்தியர் கள் கடுமையாகப் பின்பற்றினர். அந்த நாட்களில் அனைத்துத் தொழிலாளர் களும் நியாயமான முறையில் நடத்தப் பட்டனர். அனைத்துப் பொருளாதாரப் பரிவர்த்தனைகளும் முறையான கணக்கி யலுடன் வெளிப்படையானவையாக இருந்தன. ஏமாற்றுதல் மற்றும் நேர்மை யற்ற வழக்குகள் மிகக்குறைவு, ஏனெனில் அவை சுய ஒழுக்கம் மற்றும் ஒழுக்க விழுமியங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தன.

"கொள்வதூஉம் மிகை கொளாது, கொடுப்பதூஉம்குறை கொடாது" (210வது வரி) வணிகர்கள் வாழ்ந்த செய்தியைப் பட்டினப்பாலையும் எடுத்தியம்புகிறது. பழங்கால வணிகர்கள் தங்கள் வணிகத்தை நேர்மையுடன், கலப்படம் இல்லாத பொருட்களை நியாயமான விலையில் நுகர்வோருக்கு அளித்தனர். மேலும் நுகர்வோரை மரியாதையுடன் நடத்தினர் என்பதை டி. என். ஜா (பண்டைய இந்தியாவின் பொருளா தாரம் 2004) குறிப்பிட்டுள்ளனர்.

## வளங்களைச் சுரண்டாதது

சிந்து சமவெளி நாகரிகத்தில், வள மேலாண்மை அமைப்பு அசாதாரண மானது, ஏனெனில் தன்னிறைவு மற்றும் நிலைத்தன்மை ஆகியவை மனித நல்வாழ்வை ஊக்குவிப்பதற்கான முக்கிய கருத்துக்கள் மற்றும் நாட்டின் நீண்ட கால, வளமான உற்பத்தித்திறனை உறுதி செய்தன. உழைப்பின் கண்ணியம் தொழி லாளர்களைத் தேசத்தின் வளர்ச்சிக்கு மேலும் பங்களிக்கத் தூண்டியது. அவர் கள் ஆட்சிக்காலம் முழுவதும் ஆதரவுத் தூணாக வளமேம்பாடு அமைந்தது.

பண்டைய இந்தியாவில் நிலையான வளங்களை முறையாகப் பயன்படுத்து வதற்கான சிந்தனைகள் எழ ஆரம்பித் தன. அது மட்டுமல்லாமல் இயற்கை சுழற்சிகள் பற்றிய ஆழமான புரிதலில் வேரூன்றி இருந்து வளங்கள் அதிகமாக சுரண்டப்படாமல் இருந்தன என்பதை ஏ. எல். பாஷாம் அவர்கள் கூறுகின்றார் (தி வொண்டர் தட் வாஸ் இந்தியா-1954).

## தேசிய நல்வாழ்வு

தேசிய நல்வாழ்வு என்பது பொருளாதார செழிப்பு, சமூக அமைதி மற்றும்

கலாச்சாரம் ஆகியவற்றை வெற்றிகரமான ஒருங்கிணைப்பாக கருதப்பட்டது. அரசு என்பது வரிகளை வசூலிப்பதற்கு மட்டுமல்லாமல் சமூக சமநிலை, சமூக நீதி போன்ற நல்ல செயல்களின் மூலம் அரசு சமூகத்தை அரவணைத்தது என்று ஆர்.சி.மஜூம்தார் கூறுகின்றார் (பண்டைய இந்தியா-1954). முறையான நிர்வாக முறையின் மூலம் தேசிய நலனை மேம்படுத்துவதே பழங்கால மக்களின் முக்கிய குறிக்கோளாக அமைந்தது. நாட்டில் சாதி, மதம், மத வேறுபாடின்றி அனைவரும் பயன்பெற வேண்டும். வேற்றுமையில் ஒற்றுமையை ஊக்குவிப்பதில் மிகவும் குறிப்பிட்டவர்களாகத் திகழ்ந்தனர். இது நாடு முழுவதும் உள்ள மக்களை இணைக்கும் நடைமுறையாக தேசிய நல்வாழ்வு என்பது திகழ்ந்தது.

### நிலக்கொள்கை

பழங்கால மக்கள் எடுத்த முக்கிய நடவடிக்கைகளில் நிலக்கொள்கையும் ஒன்று. அக்காலத்தில் உன்னத நோக்கத்திற்காக மத நிறுவனங்களுக்கு நிலம் வழங்கினர்; நிலவருவாய் குறிப்பிடத்தக்கதாகவும் நிலையானதாகவும் இருந்தன. மேலும், இது பொதுத் திட்டங்களுக்கு நிதியளிக்க உதவியது. இராணுவச் செலவுகளையும் ஆதரித்தது. வருவாயை வீணாக்காமல் சரியாகப் பயன்படுத்தினர். ஒவ்வொரு செயலுக்கும் பின்னால் ஒரு உன்னத சக்தி இருப்பதாக அவர்கள் உறுதியாக நம்பினர், எனவே அவர்கள் பொதுவாகச் சமூகத்தின் நல்வாழ்வுக்காக ஆன்மீக நடவடிக்கைகளை ஊக்குவித்தனர்.

பண்டைய இந்தியப் பொருளாதாரம் என்ற புத்தகத்தில் பண்டைய இந்தியாவின் நல்ல கொள்கைகள் வகுக்கப்பட்டன என்பதையும் அது நிலைத்தன்மையை உடையது என்பதையும் உறுதி செய்து எஸ். செட்டர் (1987) என்பவர் ஆய்ந்துரைத்துள்ளார். மேலும் ஏழை விவசாயிகளுக்கு தேவையான நிலம் கிடைப்பதை உறுதி செய்து சிறப்பான முறையில் ஆட்சியைப் பண்டைய இந்திய அரசர்கள் செய்தனர் என்பதை உறுதிபடக் கூறுகின்றார்.

### கல்வி மையங்கள்

இந்தியர்கள் தரமான கல்வியை மேம்படுத்த பல்வேறு இடங்களில் கற்றல் மையங்களை உருவாக்கினர். தக்ஷஷிலா மற்றும் நாளந்தா பல்கலைக்கழகம் போன்ற பழங்காலத்தில் மிகவும் பிரபலமான பல்கலைக்கழகங்கள் உள்ளன. கூட்டு அறிவு மூலம், பொருளாதார வளர்ச்சி மற்றும் மேம்பாட்டை அதிகரிக்கத் திறமையான பணியாளர்களை உருவாக்கினர். பண்டைய இந்தியப் பொருளாதாரம் என்ற புத்தகத்தில் பண்டைய இந்தியாவின் நல்ல கொள்கைகள் வகுக்கப்பட்டன என்பதையும் அது நிலைத்தன்மையை உடையது என்பதையும் ஆய்ந்து எஸ். செட்டர் (1987) அவர்கள் உறுதிபடக் கூறியுள்ளார்.

பண்டைய இந்தியர்களின் சித்தாந்தம் நடைமுறையானதாகவும் ஒவ்வொரு சாதாரண மனிதனுக்கும் பயனுள்ளதாகவும் அமைந்தது. கல்வியில் முதலீடு மட்டுமே மேலும் வளர்ச்சியைக் கொண்டு வரும் என்பதில் அவர்கள் மிகுந்த நம்பிக்கையுடன் திகழ்ந்தனர். “பண்டைய இந்தியாவில் கல்வியானது சமூக அமைப்போடு ஆழமாக பின்னிப்பிணைந்திருந்தது. வேத அறிவை புகட்டுவதற்குப் பல இடங்களில் குருகுலங்கள் அமைத்து ஆன்மீகம் சார்ந்த வாழ்க்கைக்கு இந்தியர்கள் அடித்தளம் அமைத்தனர்” என்பதை எம். எல். ஸ்ரீனிவாஸ் (நவீன இந்தியாவில் சாதி-1952) அவர்கள் கூறுகின்றார்.

### அணைகள் மற்றும் வடிகால் அமைப்புகள்

நீர் மேலாண்மை மற்றும் கழிவுநீர் மேலாண்மை ஆகியவை அன்றைய காலகட்டத்தில் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டன. கட்டிடக் கலைஞர்கள் நீர் வடிகால் சாலை வரைபடத்தை வடிவமைத்தனர். இது மிகவும் அழகாக

இருந்தது. மேலும் இது வெள்ளத்தின் போது இன்னும் பயனுள்ளதாக அமைந்தது. கழிவுநீர் மற்றும் குடிநீர் இணைப்புகளுக்குத் தனித்தனிக் கோடுகள் பரவலாக இருந்தன. அந்தக் காலத்தில் குடிநீரும், சாக்கடை நீரும் ஒன்றாகக் கலந்துவிடாது; அதுதான் கட்டிடக் கலைஞரின் தனித்திறமையை வெளிப் படுத்துவதாக அமைந்தது.

உள்ளூர் ஆட்சியாளர்கள் மற்றும் அவர் களது நிர்வாகங்கள், பாசன கால்வாய் கள், அணைகள், கழிவுநீர் கால்வாய்கள் மற்றும் அணைகள் பராமரிப்புப் பொறுப்பை சிறப்பாக மேற்கொண்டனர் என்பதைப் பி. டி. சட்டோ பாத்யாயா அவர்கள் இந்திய நிலப்பரப்புத்துவ அமைப்பு (1960) என்ற நூலில் சிறப்பாக விளக்கியுள்ளார்.

## விலங்கு பாதுகாப்பு

பழங்காலத்தில் விலங்குகள் மிக முக்கிய மானவையாகக் கருதப்பட்டன. நாடு முழுவதும் கால்நடை வளர்ப்பை வலுப் படுத்தினர். ஏராளமான எருதுகள், எருமைகள், வெள்ளாடுகள், பன்றிகள், செம்மறி ஆடுகள்; இவை தவிர, பூனை கள், நாய்கள் மற்றும் ஒட்டகங்கள் அந்தக் காலத்தில் வளர்க்கப்பட்டன. அதிக கால் நடைகளை வளர்ப்பது நமது சுற்றுச் சூழலை ஒரு சீரான நிலையில் வைத்திருக்கிறது.

## முடிவுரை

இந்தியப் பள்ளத்தாக்கு நாகரிகம் செழிப் பும் பொருளாதார வளர்ச்சியும் அபார மாக இருந்த பொற்காலமாகும். உற்பத்தி முடிவெடுப்பதில் ஆட்சியாளர்கள் முக்கியப்பங்கு வகித்தனர். நமது நாட்டின் வளர்ச்சிக்கு அவர்களின் பங்களிப்பு மிகவும் குறிப்பிடத்தக்கது. மக்கள் இரும்பு தவிர வெள்ளி, வெண்கலம், செம்பு, தங்கம் ஆகியவற்றைப் பயன்படுத்தினர். இந்தியாவின் மேற்குப் பகுதியில் அமைந்துள்ள கடலோர நகரமான லோதல் அருகே ஒரு பெரிய கால் வாயைத் தொல்பொருள் ஆராய்ச்சியா ளர்கள் கண்டுபிடித்துள்ளனர். ஹரப்பா மற்றும் பிற இடங்களில் தானியக் களஞ்சியங்கள் காணப்படுகின்றன, இது அவர்களின் நாகரிகத்திற்கு மதிப்புமிக்க சொத்தாக அமைந்தது. இந்தக்கால கட்டத்தை நாம் பொருளாதார வளர்ச்சி மற்றும் நிலைத்தன்மைக்கான அடித்தளக் காலம் என்று அழைக்கலாம்.

## துணைநின்றவை


1. Farmer, S. Sproat, R, & Witzel, M. (2004). சிந்து-ஸ்கிரிப்ட் ஆய்வறிக்கை யின் சரிவு: கல்வியறிவு பெற்ற ஹரப்பா நாகரிகத்தின் கட்டுக்கதை. வேத ஆய்வுகளின் எலக்ட்ரானிக் ஜர்னல், 11(2), 20. http://www.safarmer. com/fsw2.
2. கோஸ்ட்மேன், CJD (1996). கற்பனா வாதத்தின் அழிவு: வெண்கல வயது சிந்து சமவெளியில் நாகரீக சரிவின் சூழல்கள். ஜர்னல் ஆஃப் அசோசி யேஷன் ஆஃப் கிராஜுவேட்ஸ் இன் நியர் ஈஸ்டர்ன் ஸ்டடீஸ் 6 (2).
3. பர்போலா, ஏ. (2008). சிந்து எழுத்து உண்மையில் எழுத்து முறை இல்லை யா? ஐராவதி, ஐராவதம் மகாதேவ னின் கௌரவத்திற்கான பாராட்டுத் தொகுதி, 113. http://www.harappa.com/script/indus-writing.
4. படேல், எஸ்எஸ் (2010, மார்ச் / ஏப்ரல்). சிந்து புதிர். தொல்லியல், 63 (2) 18, 58, 60, 65, 66. Possehl, GL (2007). மத்திய ஆசிய தொடர்பு கோளம். எக்ஸ்பெடிஷன், 49(1), 40-42. doi : 24776742
5. சுப்ரமணியன், டிஎஸ் (2006, மே 1). மயிலாடுதுறை கண்டுபிடிப்பின் முக்கியத்துவம். http://www.hinduonnet. com/2006/05/01/stories/2006050101 992000.html.
6. தாம்சன், தாமஸ் ஜே. (2006). ஒரு பண்டைய நாடற்ற நாகரிகம்: வெண்கல வயது இந்தியா மற்றும் வரலாற்றில் மாநிலம். சுதந்திர விமர்சனம், 10 (3), 365 - 384. doi : 19205108
7. Kenoyer, JM (2005). மொஹெஞ்சதா ரோ: ஒரு பண்டைய சிந்து சமவெளி பெருநகரம். http://www.mohenjodaro. net/mohenjodaroessay.html.